பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப்

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2020), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, சொல்லுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் குழுவில் 8½ ஆண்டுகாலமாக தனி அலுவலரை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். விவசாயிகள் அதில் தலைவராக அல்லது உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், Market Committee–ல் விவசாயிகளுக்கான பிரச்சினைகளையெல்லாம் அவர்கள் தீர்த்து வைப்பார்கள்.ஆனால்,சந்தைக்குழுக்களுக்குஆட்களைநியமிக்காமல் தனி அலுவலரை 8½ ஆண்டுகாலமாக-தேர்தல் நடத்துவதாக இருந்தால்கூட பரவாயில்லை-நியமனம் செய்யாமல் 8½ ஆண்டுகால பொறுப்பை தனி அலுவலரே வைத்துக்கொண்டிருப்பது தவறான ஒரு நிகழ்வு. ஆகவே, நீங்கள் உடனடியாக சந்தைக் குழுக்களை அமைத்து அதற்கு தலைவர், துணைத் தலைவர் ஆகியவர்களை நியமிக்க வேண்டும். விவசாயிகளுடைய பிரச்சினை, பல Market Committee–ல் பார்த்தீர்களென்றால், ஆட்கள் பற்றாக்குறை, பல்வேறு வகைகளில் விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை உணர்ந்து உடனடியாக மேற்குறிப்பிட்ட அந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு கால நீட்டிப்புக்குள்ளாக்காமல் விரைவில் அனைத்து சந்தைக் குழுக்களுக்கும் ஆட்களை நியமிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிற்பகல் 2–55

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தனி அலுவலர்களுடைய பராமரிப்பிலிருந்த விற்பனைக் குழுவில், 441 கிடங்குகளும், 367 பரிவர்த்தனைக் கூடங்களும், 334 உலர்களங்களும், 26 சிறப்பு வணிக வளாகங்களும், 135 குளிர்பதனக் கிடங்குகளும், 9 ஊரக வணிக மையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. நபார்டு வங்கியின் உதவியுடன் பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற விரைவில் அழுகும் தன்மையுடைய வேளாண் விளைபொருட்களுக்காக விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் ரூ.482 கோடியே 36 இலட்சம் மதிப்பில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 64 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, உழவர், உற்பத்தியாளர்கள் அமைப்புகள்மூலம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு ஒளிவுமறைவற்றவிலையினைவழங்கிடதேசியவேளாண்சந்தைமூலம் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை மேலும், 40 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்படுத்துவதற்கு பணிகள் நடைபெற்றுவருகின்றன.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கான தொகையினை மின்னணுமூலம்மாற்றுவதுஅரசின்முக்கியநோக்கமாகும்.ஏனெனில், விவசாயிகளுக்குரிய தொகைகள் உடனுக்குடன் அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாக மாற்றம் செய்யப்படுவதால், காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. இம்முறையில் இதுவரை ஏறக்குறைய ரூ.1,200 கோடி விவசாயிகளுடைய வங்கிக் கணக்கிற்கு நேரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் தமிழகம் மட்டுமே இத்தகைய முயற்சியினை மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன்மூலம் 3 இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். இது தனி அலுவலர்களின் காலத்தில்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்கீழ், 26 விற்பனைக் குழுக்களின்கீழ், 282 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டுவருகின்றன. 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 10–வது பிரிவின்படி, ஒவ்வொரு விற்பனைக் குழுவிற்கும் 16

2020 ஜனவரி 9] [திரு. இரா. துரைக்கண்ணு]

உறுப்பினர்கள் அரசால் நியமனம் செய்யப்பட வேண்டும். விற்பனைக் குழுவில் உறுப்பினர்களை நியமனம் செய்ய இயலாத நிலையில், விற்பனைக் குழுக்களின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக, 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல், ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டப் பிரிவு 33 உட்பிரிவு (1)-ன்படி விற்பனைக் குழுக்களுக்கு தனி அலுவலர் நியமிக்கப்படுகின்றனர். மேலும், தனி அலுவலர்களை அரசு அறிவிக்கை செய்து 9 ஆண்டு காலம் வரை நியமனம் செய்யலாம். சந்தைக்குழுவின் பணிகளை நிருவகிப்பதற்கு, சந்தைக்குழு உறுப்பினர் நியமிக்கப்படாத நிலையிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்த குழுவால் விவசாயிகள் மற்றும் கொள்முதல் செய்வோரின் தேவையறிந்து, அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு திருத்தச் சட்டமுன்வடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, அரசு சந்தைக் குழுவினை நியமித்திட அனைத்து முயற்சிகளும் எடுத்துவருவது உறுதி செய்யப்படுகிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.